भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

**नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका**

**New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga**

*புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக*

---


**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி, 20 அக்டோபர் 1998*

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பமாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் சட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1892 (2/1892), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (79/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 74.00

# குடிமைச் சட்டம், 1955

*(சட்ட எண் 57/1955)*

*[1955, டிசம்பர், 30]*

இந்தியக் குடிமையைப் பெறுவதற்கும் முடிவுறுத்தலுக்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஆறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:-

1. இந்தச் சட்டம், குடிமைச் சட்டம், 1955 என்று வழங்கப் பெறும். குறுந்தலைப்பு.

2. (1) இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள்கோள்.

(அ) "இந்தியாவிலுள்ள ஓர் அரசாங்கம்" என்பது, மைய அரசாங்கம் அல்லது ஒரு மாநில அரசாங்கம் என்று பொருள்படும்;

(ஆ) "குடிமகன்" என்பது, முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டினைப் பொறுத்து, அந்த நாட்டில் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள குடிமை அல்லது நாட்டினச் சட்டத்தின்படி அந்த நாட்டின் குடிமகன் அல்லது நாட்டினத்தவர் ஒருவராக இருக்கின்ற ஓர் ஆள் என்று பொருள்படும்;

(இ) "குடிமை அல்லது நாட்டினச் சட்டம்" என்பது, முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டினைப் பொறுத்து, அந்த நாட்டு அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி, அந்த நாட்டின் குடிமைக்காக அல்லது நாட்டினவுரிமைக்காக வகைசெய்யும் ஒரு செய்சட்டமாகும் என்று மைய அரசாங்கத்தினால் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விளம்பப்பட்டிருக்கலாகும் அந்த நாட்டுச் சட்டமன்றத்தின் ஒரு செய்சட்டம் என்று பொருள்படும்:

வரம்புரையாக: தென்னாப்பிரிக்க ஒன்றியத்தைப் பொறுத்து அத்தகைய அறிவிக்கை எதுவும், நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் முன் ஒப்புதலுடன் அல்லாமல், பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(ஈ) "இந்தியத்துணைத் தூதரகம்" என்பது, இந்திய அரசாங்கத்தின் துணைத் தூதரக அலுவலர் எவருடைய அலுவகத்தில் பிறப்புப்பதிவேடு ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றதோ அவருடைய அலுவலகம் என்றும், அல்லது அத்தகைய அலுவலகம் இல்லாதவிடத்து, வகுத்துரைக்கப்படலாகும் அலுவலகம் என்று பொருள்படும்;

(உ) "உரிமை வயது அடையாதவர்" என்பது, பதினெட்டு வயது எய்தப்பெறாத ஓராள் என்று பொருள்படும்;

(ஊ) "ஆள்" என்பது, நிறுமம் அல்லது கழகம் அல்லது தனியாட்களின் குழுமம் எதையும், அது பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், உள்ளடக்காது;

(எ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளின் வாயிலாக வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(ஏ) "பிரிக்கப்படாத இந்தியா" என்பது, முதன் முதலில் இயற்றப்பட்டவாறான இந்திய அரசாங்கச் சட்டம், 1935இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான இந்தியா என்று பொருள்படும்.

(2) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, நாடு எதனின் அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட கப்பலில் அல்லது வானூர்தியில் அல்லது பதிவு செய்யப்படாத கப்பலில் அல்லது வானூர்தியில் பிறந்த ஓராள், அந்தக் கப்பல் அல்லது வானூர்தி பதிவுசெய்யப்பட்ட இடத்தில் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்த நாட்டில் பிறந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தம்முடைய தந்தையின் இறப்பிற்குப் பிறகு பிறந்த ஒருவரைப் பொறுத்து, அவர் பிறந்த நேரத்தில் அவருடைய தந்தையின் தகுநிலை அல்லது விவரிப்புப் பற்றி இந்தச் சட்டத்தில் உள்ள சுட்டுகை எதுவும், அந்தத் தந்தை இறந்த நேரத்தில் அந்தத் தந்தையின் தகுநிலை அல்லது விவரிப்பு பற்றிய ஒரு சுட்டுகையாகவே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த இறப்பு இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பும், பிறப்பு அதற்குப் பின்பும் நிகழ்ந்திருக்கிறவிடத்து, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பிறகு அந்தத் தந்தை இறந்திருந்தால், எந்தத் தகுநிலை அல்லது விவரிப்பு அவருக்குப் பொருந்தத்தக்கதாக இருந்திருக்குமோ அந்தத் தகுநிலை அல்லது விவரிப்பு, அவருடைய இறப்பு நேரத்தில் அவருக்குப் பொருந்தத்தக்க தகுநிலையாக அல்லது விவரிப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆள் ஒருவர் உரிமை வயது அடையாதவராக இல்லையென்றால், முழு வயதினராகவும், மனச்சீர்கேடுற்றவராகவும் அவர் இல்லையென்றால், முழுத்திறன் உடையவராகக் கருதப்படுதல் வேண்டும்.

## குடிமையைப் பெறுதல்

பிறப்பின் மூலம் குடிமை.

3 (1). உட்பிரிவு (2) இல் வகைசெய்யப்பட்டவாறன்றி,—

(அ) 1950 ஜனவரி 26ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் குடிமை (திருத்தச்) சட்டம், 1986 இன் தொடக்கத்திற்கு முன்பு,

(ஆ) அத்தகைய தொடக்கத் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், அவர் பிறக்கும் நேரத்தில் பெற்றோர்களில் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருப்பாராயின்.

இந்தியாவில் பிறக்கும் ஆள் ஒவ்வொருவரும் பிறப்பிலேயே இந்தியக் குடிமகனாக இருப்பார்.

(2) ஆள் ஒருவர், அவர் பிறந்த நேரத்தில்,—

(அ) அவருடைய தந்தை, இந்தியக் குடியரசுத் தலைவரால் ஏற்பளிக்கப்பட்ட ஓர் அயல் நாட்டு தனிப்பேரரசு அதிகாரத்தின் தூதுவர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளவாறு உரிமை வழக்குகள் மற்றும் சட்ட நடவடிக்கையிலிருந்து தனி விலக்களிப்பு பெற்றிருந்து ஓர் இந்தியக் குடிமகனாக இல்லாதிருப்பாராயின், அல்லது

(ஆ) அவருடைய தந்தை ஓர் அயல்நாட்டுப் பகைவராக இருந்து, அந்தப் பிறப்பு பகைவரின் கையுடைமையில் அப்போதிருந்த ஓர் இடத்தில் நிகழ்ந்திருக்குமாயின்

இந்தப் பிரிவின் காரணத்தினாலேயே அத்தகைய ஒரு குடிமகனாக ஆகார்.

குடிவழிமுறை மூலம் குடிமை.

4. (1) 1950, ஜனவரி 26 அன்று அல்லது அதற்குப் பிறகு இந்தியாவுக்கு வெளியே பிறந்த ஆள் ஒருவர், தாம் பிறந்த நேரத்தில் தம் தந்தை ஓர் இந்தியக் குடிமகனாக இருந்தால், குடிவழிமுறையில் இறங்குவது மூலம் அவர் ஓர் இந்தியக் குடிமகன் ஆவார்:

வரம்புரையாக: அத்தகைய ஓர் ஆளின் தந்தை குடிவழிமுறையில் இறங்குவது மூலம் மட்டுமே ஓர் இந்தியக் குடிமகனாக இருப்பாராயின் அந்த ஆள்,—

(அ) அவருடைய பிறந்த தேதி அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்கம், இரண்டில் எது பிந்தியதோ அதிலிருந்து ஓராண்டிற்குள், அல்லது சொல்லப்பட்ட அந்தக் காலஅளவு முடிவடைந்த பிறகு, மைய அரசாங்கத்தின் இசைவளிப்புடன் ஓர் இந்தியத் துணைத் தூதரகத்தில் அவருடைய பிறப்புப் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, அல்லது

(ஆ) அவருடைய தந்தை, அவர் பிறந்த நேரத்தில், இந்தியாவிலுள்ள ஓர் அரசாங்கத்தின்கீழ் பணியில் இருந்தாலன்றி

இந்தப் பிரிவின் காரணத்தினாலேயே ஓர் இந்தியக் குடிமகனாக ஆகார்.

(2) பிறப்பினைப் பதிவு செய்வதற்கு முன்பே மைய அரசாங்கத்தின் இசைவளிப்பு பெறப்படவில்லையானாலும், இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு பிறப்பு தன் இசைவளிப்புடன் பதிவு செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்று மைய அரசாங்கம் பணிக்குமாயின், அவ்வாறே கருதப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன் வரம்புரையின் நோக்கங்களுக்காக, அரசமைப்பின் தொடக்கத்தில் ஓர் இந்தியக் குடிமகனாக இருந்த அல்லது இருந்ததாகக் கருதப்பட்ட, பிரிக்கப்படாத இந்தியாவுக்கு வெளியே பிறந்த ஆடவர் எவரும், குடிவழிமுறையில் இறங்குவது மூலம் மட்டுமே ஓர் இந்தியக் குடிமகனாக கருதப்படுதல் வேண்டும்.

5. (1) இந்தப் பிரிவின் வகையங்களுக்கும், வகுத்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, அரசமைப்பின் காரணத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின் வேறு வகையங்களின் ஏதொன்றின் காரணத்தினால் ஏற்கெனவே ஓர் இந்தியக் குடிமகனாக இல்லாதிருந்து, பின்வரும் வகைகளில் எதனையும் சேர்ந்திருக்கிற ஆள் எவரையும், இதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு அத்தகைய குடிமகனாகப் பதிவு செய்யலாம்:— பதிவு செய்தல் மூலம் குடிமை.

(அ) இந்தியாவில் வழக்கமாகக் குடியிருப்பவராகவும், பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கு அடுத்து முந்திய ஐந்து ஆண்டுகளில் இந்தியாவில் குடியிருந்து வருகிறவராகவுள்ள, இந்தியாவைத்தாயகமாகக் கொண்ட ஆட்கள்;

(ஆ) பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளியே உள்ள நாடு எதிலும் அல்லது இடம் எதிலும் வழக்கமாகக் குடியிருப்பவராக உள்ள, இந்தியாவைத் தாயகமாகக் கொண்டவர்கள்;

(இ) இந்தியக் குடிமக்களைத் திருமணம் செய்துகொள்கிற அல்லது செய்துகொண்டிருக்கிற ஆட்கள்; அவர்கள் வழக்கமாக இந்தியாவில் குடியிருப்பவராக இருந்து, இதற்காக ஒரு விண்ணப்பத்தினைச் செய்வதற்கு அடுத்து முந்திய ஐந்து ஆண்டுகளுக்கு அவ்வாறு குடியிருந்தவராக இருப்பவர்கள்;

(ஈ) இந்தியக் குடிமக்களாக உள்ளவர்களின் உரிமை வயது அடையாத குழந்தைகள் ; மற்றும்

(உ) முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டின் குடிமக்களாக உள்ள, முழுவயதும் திறனும் உடைய ஆட்கள்:

*வரம்புரையாக:* அத்தகைய நாடு ஏதொன்றின் ஆட்கள் எந்த வரைக் கட்டுகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு இந்தக் கூறின்படி இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்யப்படலாகுமோ அந்த வரைக்கட்டுகளையும், கட்டுப்பாடுகளையும் வகுத்துரைக்குங்கால், அந்த நாட்டின் சட்டம் அல்லது நடைமுறை மூலம், இந்தியக் குடிமக்கள், எந்த வரைக்கட்டுகளுக்குட்பட்டு பதிவு செய்தல் வாயிலாக அந்த நாட்டின் குடிமக்களாக ஆகலாகுமோ அந்த வரைக்கட்டுகளை, மைய அரசாங்கம், உரியவாறு கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

*விளக்கம்.*— இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஓர் ஆள் தாமோ அல்லது தம்முடைய பெற்றோர்களில் ஒருவரோ பிரிக்கப்படாத இந்தியாவில் பிறந்திருந்தால், இந்தியாவைத் தாயமாகக் கொண்டவராக கருதப்படுதல் வேண்டும்.

(2) முழு வயதைப் பெற்றிருக்கும் ஆள் எவரும், இரண்டாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பற்றுறுதி உறுதிமொழியைத் தாம் எடுத்துக்கொள்கிறவரையில், உட்பிரிவு (1) இன்படி ஓர் இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்யப்படுதல் ஆகாது.

(3) தம்முடைய இந்தியக் குடிமையைத் துறந்திருக்கின்ற அல்லது இந்தியக் குடிமை மறுக்கப்பட்டிருக்கிற அல்லது இந்தச் சட்டத்தின்படி குடிமை முடிவுறுத்தப்பட்டிருக்கிற ஆள் எவரும், மைய அரசாங்கத்தின் ஆணையின் மூலம் அல்லாமல் உட்பிரிவு (1) இன்படி ஓர் இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்யப்படுதல் ஆகாது.

(4) மைய அரசாங்கம், உரியவயது அடையாதவர் எவரையும் ஓர் இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்வதை எண்பிப்பதற்குச் சிறப்பான சூழ்நிலைகள் இருக்கின்றன என்று தெளிவுறக்காணுமாயின், அவரை அவ்வாறு பதிவு செய்து கொள்ளுமாறு செய்யலாம்.

(5) இந்தப் பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட ஒருவர், அவ்வாறு அவர் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து, பதிவு செய்வதன் மூலம் இந்தியக் குடிமகன் ஆவார்; மற்றும் அரசமைப்பின் உறுப்பு 6 இன் கூறு (ஆ) (ii) இன் அல்லது உறுப்பு 8 இன் வகையங்களின்படி பதிவு செய்யப்பட்ட ஒருவர், அரசமைப்பின் தொடக்கம் அல்லது அவ்வாறு அவர் பதிவு செய்யப்பட்ட தேதி, இரண்டில் எது பிந்தியதோ அதிலிருந்து, பதிவு செய்வதன் மூலம் ஓர் இந்தியக் குடிமகனாகக் கருதப்படுதல் வேண்டும்.

குடிமையளிப்பு மூலம் குடிமை.

6. (1) தமக்குக் குடிமையளிப்பு வழங்குதலுக்கான உறுதிச்சான்று அளிக்கப்படுவதற்காக, முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டின் குடிமகனாக இல்லாத முழுவயதும் திறனும் வரப்பெற்ற எவராலும், விண்ணப்பம் ஒன்று வகுத்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படும்போது, மைய அரசாங்கம், மூன்றாம் இணைப்புப்பட்டியலின் வகையங்களின்படி குடிமையளிப்பு வழங்கப்படுவதற்கு அந்த விண்ணப்பதாரர் தகுதியுடையவராயுள்ளார் என்று தெளிவுறக்காணுமாயின், அவருக்குக் குடிமையளிப்பு வழங்குதலுக்கான உறுதிச்சான்றினை அளிக்கலாம்:

வரம்புரையாக: மைய அரசாங்கத்தின் கருத்தில், அந்த விண்ணப்பதாரர் பொதுவாக, அறிவியல், தத்துவம், கலை, இலக்கியம், உலக அமைதி அல்லது மனித இன மேம்பாட்டின் நோக்கங்களுக்காகத் தனிச் சிறப்புடைய தொண்டு புரிந்திருக்கிற ஓர் ஆளாக இருப்பாராயின், மூன்றாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகள் அனைத்தையுமோ, அவற்றுள் எதையுமோ, அது தளர்த்தலாம்.

(2) உட்பிரிவு (1) இன்படி குடிமையளிப்பு வழங்குதலுக்கான உறுதிச்சான்று அளிக்கப்பட்டுள்ள ஆள், இரண்டாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் பற்றுறுதி உறுதிமொழி எடுத்துக் கொள்வதன்பேரில், அந்த உறுதிச்சான்று அளிக்கப்படுகிற தேதியிலிருந்து, குடிமையளிப்பு வழங்குதலின் மூலம் ஓர் இந்திய குடிமகனாக இருப்பார்.

அசாம் உடன்படிக்கையினால் உள்ளடக்கப்பட்டுள்ள ஆட்களின் குடிமை பற்றிய சிறப்பு வகையங்கள்.

6அ. (1) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

(அ) "அசாம்" என்பது, குடிமை (திருத்தச்) சட்டம், 1985 இன் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, அசாம் மாநிலத்தில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள் என்று பொருள்படும்.

(ஆ) "ஓர் அயல்நாட்டவர் எனக் கண்டறியப்பட்டவர்" என்பது, அயல் நாட்டவர்கள் சட்டம், 1946 மற்றும் அயல்நாட்டவர்கள் (தீர்ப்பாயங்கள்) ஆணை, 1964 இன் வகையங்களுக்கிணங்கியவாறு மேற்சொன்ன ஆணையின்படி அமைக்கப்பட்ட ஒரு தீர்ப்பாயத்தினால் ஓர் அயல்நாட்டவர் என்று கண்டறியப்பட்டவர் என்று பொருள்படும்;

(இ) "குறித்துரைக்கப்பட்ட ஆட்சிநிலவரை" என்பது, குடிமை (திருத்தச்) சட்டம், 1985 இன் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, வங்காள தேசத்தில் அடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள் என்று பொருள்படும்;

(ஈ) ஓர் ஆள் அல்லது அவரது பெற்றோரில் ஒருவர் அல்லது அவரது பெற்றோரின் பெற்றோர்களின் எவரும், பிரிவினையாகாத இந்தியாவில் பிறந்திருப்பாரானால், அவர் இந்தியாவைத் தாயகமாகக் கொண்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்;

(உ) அயல்நாட்டவர்கள் (தீர்ப்பாயங்கள்) ஆணை, 1964 இன்படி அமைக்கப்பட்ட ஒரு தீர்ப்பாயம், அவர் ஓர் அயல்நாட்டவர் என்றபடிக்கான தனது கருத்தினை அலுவலருக்கு அல்லது தொடர்புடைய அதிகார அமைப்பிற்குப் பணிந்தனுப்புகிற தேதியன்று ஓர் ஆள் அயல்நாட்டவராகக் கண்டுபிடிக்கப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (6), (7) ஆகியவற்றின் வகையங்களுக்கு உட்பட்டு, 1966, சனவரி முதல் நாளுக்கு முன்பு (1967 இல் நடந்த மக்கள் அவைக்கான பொதுத் தேர்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களில் எவருடைய பெயர்கள் அடக்கப்பட்டிருந்தனவோ அவர்கள் உள்ளடங்கலாக) அசாமுக்குள் அவர்கள் நுழைந்த தேதிகள் முதற்கொண்டு, வழக்கமாக அசாமில் குடியிருப்பவராக இருந்திருக்கிறவர்கள் அனைவரும்; மற்றும் அத்தகைய தேதிகளிலிருந்து அசாமில் நுழைந்த, அசாமில் வழக்கமாகத் தங்கிவருகிறவர்கள், 1966, சனவரி முதல் நாளிலிருந்து இந்தியக் குடிமக்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (6), (7) ஆகியவற்றின் வகையங்களுக்கு உட்பட்டு,—

(அ) 1966, சனவரி முதல் நாளன்று அல்லது அதற்குப் பின்பு, ஆனால், 1971 மார்ச் 25ஆம் தேதிக்கு முன்பு குறித்துரைக்கப்பட்ட ஆட்சி நிலவரையிலிருந்து அசாமிற்கு வந்த, மற்றும்

(ஆ) அசாமில் அவர் நுழைந்த தேதியிலிருந்து அசாமில் வழக்கமாகக் குடியிருப்பவராக இருந்துவருகிற, மற்றும்

(இ) ஓர் அயல்நாட்டவரெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற

இந்தியாவைத் தாயமாகக் கொண்டவர் ஒவ்வொருவரும், அத்தகைய அதிகாரஅமைப்பிடம் இதற்கென மைய அரசாங்கத்தினால் பிரிவு 18 இன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கியவாறு, அத்தகைய விதிகளில் குறித்துரைக்கப்படலாகிறவாறான அதிகாரஅமைப்பிடம் (இதன் பின்பு இந்த உட்பிரிவில் பதிவு செய்யும் அதிகாரஅமைப்பு என்று குறிப்பிடப்படுவது) பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்; மற்றும், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட தேதியன்று, செல்லாற்றிலில் உள்ள சட்டப்பேரவை அல்லது நாடாளுமன்றத் தொகுதி எதற்குமான வாக்காளர் பட்டியல் எதிலும் அவரது பெயர் சேர்க்கப்பட்டிருக்குமாயின் அதிலிருந்து அவரது பெயர் நீக்கிவிடப்படுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்த உட்பிரிவின்படி பதிவு செய்தலை நாடுகிற ஒவ்வொருவரையும் பொறுத்த அத்தகையவரை ஓர் அயல்நாட்டவர் எனக் கருதுகின்ற அயல் நாட்டவர்கள் (தீர்ப்பாயங்கள்) ஆணை, 1964 இன்படி அமைக்கப்பட்ட தீர்ப்பாயம் இந்த உட்பிரிவின் கூறு (இ) இன்படி வேண்டுறுத்ததிற்குப் போதிய சான்றுறுதியாகக் கருதப்படுதல் வேண்டும்; மற்றும் இந்த உட்பிரிவின் படியான பிற வேண்டுறுத்தங்கள் எவற்றிக்கும் அத்தகையவர் இணங்கி நடத்துள்ளாரா என்னும் வினா எதுவும் எழுகிறது என்றால் பதிவுசெய்ய அதிகாரஅமைப்பு,—

(i) அத்தகைய கருத்து அத்தகைய பிற வேண்டுறுத்தம் பொறுத்து முடிபு ஒன்றைக் கொண்டிருக்கிறது என்றால் அத்தகைய முடிபுக்கு இணங்க அந்த வினாவைத் தீர்மானித்தல் வேண்டும்;

(ii) அத்தகைய கருத்து அத்தகைய பிற வேண்டுறுத்தம் பொறுத்து முடிபு ஒன்றைக் கொண்டிராதிருக்கிறது என்றால், பிரிவு 18 இன்படி மைய அரசாங்கத்தினால் இதற்கென செய்யப்படலாகும் விதிகளுக்கு இணங்கியவாறு மேற்சொன்ன ஆணையின்படி அமைக்கப்பட்ட அதிகாரவரம்பு கொண்டுள்ள ஒரு தீர்ப்பாயத்திடம் அந்த வினாவைச் சுட்டியனுப்பி, அத்தகைய சுட்டுகையின் மேல் பெறப்பட்ட கருத்திற்கிணங்க அந்த வினாவைத் தீர்மானித்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3) இன்படி பதிவு செய்யப்பட்ட ஓர் ஆள் அவர் எந்தத் தேதியில் ஓர் அயல்நாட்டவராகக் கண்டுபிடிக்கப்பட்டாரோ அந்தத் தேதியிலிருந்தும், அந்தத் தேதியிலிருந்து பத்து ஆண்டுக் காலஅளவு முடிவடையும் வரையிலும் (கடவுச் சீட்டுகள் சட்டம், 1967 இன்படி கடவுச்சீட்டு ஒன்றைப் பெறுவதற்கான உரிமை மற்றும் அதனுடன் இணைவுடைய கடமைப்பொறுப்புகள் உள்ளடங்கலாக) ஓர் இந்தியக் குடிமகனைப் போன்ற அதே உரிமைகளையும் கடமைப்பொறுப்புகளையும் உடையவர் ஆவார். ஆனால், மேற்சொன்ன பத்து ஆண்டு காலஅளவானது முடிவுறுவதற்கு முன்பு, எவ்வமையத்திலும், பேரவை அல்லது நாடாளுமன்றத் தொகுதி எதற்குமான வாக்காளர் பட்டியல் எதிலும் அவரது பெயர் சேர்க்கப்படுவதற்கு உரிமைகொண்டவர் ஆகார்.

(5) உட்பிரிவு (3) இன்படி பதிவு செய்யப்பட்டவர் ஓர் அயல் நாட்டவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற தேதியிலிருந்து, பத்து ஆண்டுகாலம் முடிவடைந்த தேதியிலிருந்து அனைத்து நோக்கங்களுக்காகவும் ஓர் இந்தியக் குடிமகனாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) பிரிவு 8 இன் வகையங்களுக்கு ஊறின்றி,—

(அ) உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டவர் எவரும், குடியுரிமை (திருத்தச்) சட்டம், 1985 இன் தொடக்கத் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்பட்ட முறையிலும் படிவத்திலும் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பிற்கும் தாம் ஓர் இந்தியக் குடிமகனாக இருக்க விரும்பவில்லை என்னும் விளம்புகை ஒன்றைப் பணிந்தனுப்புகிறார் என்றால், அத்தகையவர், அந்த உட்பிரிவின்படி ஓர் இந்தியக் குடிமகனாக ஆகியுள்ளதாகக் கருதப்படுதலாகாது;

(ஆ) உட்பிரிவு (3) இல் குறிப்பிடப்பட்டவர் எவரும், குடிமை (திருத்தச்) சட்டம், 1985இன் தொடக்கத் தேதியிலிருந்து அல்லது அவர் ஓர் அயல்நாட்டவராகக் கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து, இதில் எது பிந்தியதோ அதிலிருந்து, அறுபது நாட்களுக்குள், வகுத்துரைக்கப்பட்ட முறையிலும், படிவத்திலும் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பிற்கு அந்த உட்பிரிவு மற்றும் உட்பிரிவு (4), (5) ஆகியவற்றின் வகையங்களின் ஆளுகைக்கு உட்படுத்துவதற்குத் தாம் விரும்பவில்லை என்று விளம்புகை ஒன்றைப் பணிந்தனுப்புகிறார் என்றால், அத்தகையவர் உட்பிரிவு (3) இன்படி தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை.

விளக்கம்.—இந்த உட்பிரிவின்படி ஒரு விளம்புகையை முன்னிடுமாறு வேண்டுறுத்தப்பட்ட ஓர் ஆள், ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளத் திறனற்றவராக இருக்கிறவிடத்து, அவர் சார்பாகச் செயற்பட அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி தகுதிறம் வாய்ந்தவர் எவராலும் அவர் சார்பாக அத்தகைய விளம்புகை முன்னிடப்படலாம்.

(7) உட்பிரிவு (2) முதல் (6) வரையில் உள்ள எதுவும்,—

(அ) குடிமை (திருத்தச்) சட்டம், 1985இன் தொடக்கநிலையை ஒட்டி முன்பு ஓர் இந்தியக் குடிமகனாக இருக்கிற.

(ஆ) குடிமை (திருத்தச்) சட்டம், 1985இன் தொடக்கநிலைக்கு முன்பு அயல்நாட்டவர்கள் சட்டம், 1946 இன்படி இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டவர்

எவர் தொடர்பாகவும் பொருந்துதல் ஆகாது.

(8) இந்தப் பிரிவில் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, இந்தப் பிரிவின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறியிருப்பினும், செல்திறம் உடையது ஆகும்.

ஆட்சி நிலவரைகள் ஒன்றாகச்சேர்த்துக் கொள்ளப் படுவதன் மூலம் குடிமை.

7. ஆட்சிநிலவரை எதுவும், இந்தியாவில் ஒரு பகுதியாக ஆகுமானால், மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட ஆணை வாயிலாக அந்த ஆட்சி நிலவரையுடன் தங்களுக்குள்ள தொடர்பின் காரணமாக இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டிய ஆட்களை குறித்துரைக்கலாம்; மற்றும் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படவேண்டிய தேதியிலிருந்து, அந்த ஆட்கள் இந்தியக் குடிமக்களாக இருப்பார்கள்.

(குடிமை முடிவுறுதல்)

குடிமையைத் துறத்தல்.

8. (1) முழுவயதும் தகுதியும் வாய்ப்பெற்றவரும் வேறொரு நாட்டின் குடிமகனாக அல்லது நாட்டினத்தவராக இருக்கிறவருமான இந்தியக் குடிமகன் எவரும் வகுத்துரைக்கப்பட்ட முறையில் தம்முடைய இந்தியக் குடிமையைத் துறக்கின்ற விளம்புகை ஒன்றைச் செய்வாரானால், வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பினால் அந்த விளம்புகை பதிவு செய்யப்படுதல் வேண்டும்; மேலும் அவ்வாறு பதிவு செய்யப்படுவதன் பேரில் அந்த ஆள் ஓர் இந்தியக் குடிமகனாக இருப்பதிலிருந்து அற்றுப்போவார்:

*வரம்புரையாக:* அத்தகைய விளம்புகை எதுவும், இந்தியா ஈடுபடலாகும் போர் எதன்பேரிலும் செய்யப்படுமானால், மைய அரசாங்கம் வேறெந்த வகையிலேனும் பணிக்கின்றவரையில், அதனைப் பதிவு செய்தல் நிறுத்திவைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆடவர் ஒருவர், உட்பிரிவு (1) இன்படி இந்தியக் குடிமகனாக இருப்பதிலிருந்து அற்றுப்போகுமிடத்து, அந்த ஆளின் உரிமைவயது அடையாத குழந்தை ஒவ்வொன்றும் அதன்பேரில் இந்தியக் குடிமகனாக இருப்பதிலிருந்து அற்றுப்போகும்:

*வரம்புரையாக:* அத்தகைய குழந்தை எதுவும், முழுவயது அடைந்த பிறகு ஓர் ஆண்டுக்குள், தாம் மீண்டும் இந்தியக் குடிமை அடைய விரும்புவதாக ஒரு விளம்புகை செய்யலாம்; மற்றும் அதன்பேரில் அவர் மீண்டும் ஓர் இந்தியக் குடிமகனாக ஆவார்.

(3) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, திருமணம் செய்யப்படுகிற அல்லது திருமணம் செய்யப்பட்டுள்ள பெண் எவரும், முழுவயது அடைந்தவராக கருதப்படுதல் வேண்டும்.

9.(1) குடிமையளிப்பு வழங்குதல், பதிவு செய்தல் மூலம் அல்லது குடிமை வேறெந்த வகையிலேனும் வேறொரு நாட்டின் குடிமையைத் தாமாக விரும்பிப் பெறுகிற அல்லது 1950, சனவரி 26க்கும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கும் இடையே எந்த நேரத்திலும் தாமாக விரும்பிப் பெற்றிருக்கிற இந்தியக்குடிமகன் எவரும், அவ்வாறு பெறுவதன்பேரில் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய தொடக்கத்தின்பேரில், இந்தியக் குடிமகனாக இருப்பதிலிருந்து அற்றுப்போவார்: குடிமை முடிவுறுதல்.

*வரம்புரையாக:* இந்த உட்பிரிவிலுள்ள எதுவும், இந்தியா ஈடுபடலாகும் போர் எதன்போதும் வேறொரு நாட்டின் குடிமையைத் தாமாக விரும்பிப் பெறுகிற ஓர் இந்திய குடிமகனுக்கு, மைய அரசாங்கம், வேறுவகையில் பணிக்கிற வரையில் பொருந்தாது.

(2) எந்த ஆளும், வேறொரு நாட்டின் குடிமையை எப்போது அல்லது எவ்வாறு பெற்றுள்ளார் என்று கேள்வி எதுவும் எழுமாயின், இதற்கென வகுத்துரைக்கப்படலாகும் அதிகாரஅமைப்பினாலும் முறையிலும், சான்று விதிகளைக் கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

10. (1) குடிமையளிப்பு வழங்குதல் மூலம் அல்லது அரசமைப்பின் உறுப்பு 5 இன் கூறு (இ) இன் காரணத்தால் மட்டுமே அல்லது அரசமைப்பின் உறுப்பு 6 இன் கூறு (ஆ) (ii) இன்படியல்லாமல் அல்லது இந்தச் சட்டத்தின் பிரிவு 5 இன் உட்பிரிவு (1) இன் கூறு (அ) இன்படியல்லாமல் வேறெந்த வகையிலேனும் பதிவு செய்தல்மூலம் ஓர் இந்தியக் குடிமகனாக இருக்கின்ற ஒருவர், இந்தப் பிரிவின்படி மைய அரசாங்கத்தின் ஆணை ஒன்றின் மூலம் அந்தக் குடிமை பறிக்கப்படுமாயின், அவர் ஓர் இந்தியக் குடிமகனாக இருப்பதிலிருந்து அற்றுப்போவார். குடிமையைப் பறித்தல்.

(2) இந்தப் பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு, மைய அரசாங்கம்,—

(அ) இந்தப் பதிவு அல்லது குடிமையளிப்பு வழங்குதலுக்கான உறுதிச்சான்று, மோசடி, பொய்யான எடுத்துரைத்தல் அல்லது முக்கியமான பொருண்மை எதையும் மறைப்பது மூலம் பெறப்பட்டது என்று, அல்லது

(ஆ) அந்தக் குடிமகன் செய்கை அல்லது பேச்சின் மூலம், சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டிருக்கிறவாறான இந்திய அரசமைப்பின்பால் பற்றுறுதி இல்லாதவராக அல்லது பற்றுறுதி குலைந்தவராகத் தம்மைக் காட்டிக்கொண்டிருக்கிறார் என்று, அல்லது

(இ) அந்தக் குடிமகன், இந்தியா ஈடுபடலாகும் போர் எதன் போதும் ஒரு பகைவரோடு சட்டமுரணாக வாணிபம் நடத்தியுள்ளார் அல்லது தொடர்பு கொண்டுள்ளார் அல்லது அந்தப் போரில் ஒரு பகைவருக்கு உதவுகின்ற முறையில் அவருக்குத் தெரிந்தே நடத்தப்பட்ட வணிகம் எதிலும் ஈடுபட்டிருக்கிறார் அல்லது தொடர்புடையவராக இருக்கிறார் என்று, அல்லது

(ஈ) அந்தக் குடிமகன், பதிவு செய்யப்பட்டதற்கு அல்லது குடிமையளிப்பு வழங்கப்பட்டதற்குப் பின்பு ஐந்து ஆண்டுகளுக்குள், இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலஅளவிற்கு, எந்த நாட்டிலும் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்பட்டிருக்கிறார் என்று, அல்லது

(உ) அந்தக் குடிமகன், தொடர்ந்து ஏழு ஆண்டு காலத்திற்கு இந்தியாவிற்கு வெளியே வழக்கமாகக் குடியிருந்து வந்திருக்கிறார் என்றும், அந்தக் கால அளவின்போது இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஒரு நாட்டின் கல்வி நிலையம் எதிலும் ஒரு மாணவராக, அல்லது இந்தியாவிலுள்ள பன்னாட்டு அமைப்பு ஒன்றின் பணியில் எந்தக் காலத்திலும் இருந்திருக்கவில்லை அல்லது இந்தியத் துணைத் தூதரகம் ஒன்றில், தம் இந்தியக் குடியுரிமையைத் தொடர்ந்து வைத்துக்கொள்வதற்கென தம் கருத்தினை வகுத்துரைக்கப்பட்ட முறையில் ஆண்டு தோறும் பதிவு செய்யவில்லை என்றும்

தெளிவுறகானுமாயின், ஆணைவாயிலாக அத்தகைய குடிமகன் எவரிடமிருந்தும் இந்தியக் குடிமையைப் பறித்துக்கொள்ளலாம்.

(3) அந்த ஆள், இந்தியக் குடிமகனாகத் தொடர்ந்திருப்பது பொது நலத்திற்கு உகந்ததாயிராது என மைய அரசாங்கம் தெளிவுறக் கண்டாலன்றி, இந்தப் பிரிவின்படி ஓர் ஆளின் குடிமையை அது பறித்துக்கொள்ளுதல் ஆகாது.

(4) இந்தப் பிரிவின்படி ஓர் ஆணையைப் பிறப்பிப்பதற்கு முன்பு, மைய அரசாங்கமானது எந்த ஆளுக்கு எதிராக அந்த ஆணை பிறப்பிக்கக் கருதப்படுகிறதோ அந்த ஆளுக்கு, எந்தக் காரணத்தின் பேரில் அது பிறப்பிக்கக் கருதப்படுகிறோ அந்தக் காரணத்தையும் அந்த ஆணையை உட்பிரிவு (2) இன் கூறு (உ) அல்லாத அதன் பிற கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட காரணங்களில் எதன்பேரிலும் பிறப்பிக்க கருதப்படுமாயின், வகுத்துரைக்கப்பட்ட முறையில் அதற்கான விண்ணப்பம் செய்யப்படுவதன்பேரில், இந்தப் பிரிவின்படியான விசாரணைக் குழு ஒன்றிற்கு அவரது வழக்கினைச் சாட்டியனுப்பும்படி செய்வதற்கு அவருக்குள்ள உரிமையையும் அவருக்குத் தெரிவிக்கிற எழுத்துருவிலான அறிவிப்பைக் கொடுத்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு (2) இன் கூறு (உ) அல்லாத அதன் பிற கூறுகளில் குறித்துரைக்கப்பட்ட காரணங்களில் எதன்பேரிலும் ஓர் ஆளுக்கு எதிராக அந்த ஆணை பிறப்பிக்கக் கருதப்பட்டு, அந்த ஆள், வகுத்துரைக்கப்பட்ட முறையில் அவ்வாறு விண்ணப்பம் செய்து கொள்வாராயின், மைய அரசாங்கம் அந்த வழக்கினை இதற்கென மைய அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட (குறைந்தது பத்து ஆண்டுகள் ஒரு நீதித்துறைப் பதவியை வகித்த ஓர் ஆளாக இருக்கிற) தலைவர் ஒருவரையும், வேறு இரண்டு உறுப்பினர்களையும் கொண்ட ஒரு விசாரணைக் குழுவுக்குச் சாட்டியனுப்புதல் வேண்டும்; மற்றும் வேறெந்த நேர்விலும் அதைச் சாட்டியனுப்பலாம்.

(6) அந்த விசாரணைக்குழு, அவ்வாறு சாட்டியனுப்பப்படுவதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் முறையில் அந்த விசாரணையை நடத்தி, அதன் அறிக்கையை மைய அரசாங்கத்திற்குப் பணிந்தனுப்பிவைத்தல் வேண்டும்; மேலும், இந்தப் பிரிவின்படி ஆணை ஒன்றைப் பிறப்பிக்குங்கால் மைய அரசாங்கம் வழக்கமாக அத்தகைய அறிக்கையால் வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

## துணையுறுவானவை

பொதுநல அரசுக்குழாம் குடிமை.

11. முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு பொதுநல அரசுக்குழாம் நாட்டின் ஒரு குடிமகனாக இருக்கிற ஒவ்வோர் ஆளும், அந்தக் குடிமையின் காரணத்தாலேயே இந்தியாவிலும் ஒரு பொது நல அரசுக்குழாம் நாட்டுக் குடிமகனின் தகுநிலைமைக் கொண்டிருப்பார்.

இந்தியக் குடிமகனுக்கான உரிமைகளைச் சிலநாடுகளின் குடிமக்களுக்கு வழங்குவதற்கான அதிகாரம்.

12. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட ஆணை வாயிலாக, முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நாடு எதனின் குடிமக்களுக்கு, ஓர் இந்தியக் குடிமகனின் உரிமைகள் அனைத்தையுமோ அவற்றுள் எதையுமோ வழங்குவதற்காக, ஓர் எதிரீட்டு அடிப்படையில், வகையங்களைச் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1) இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், இந்திய அரசமைப்பு அல்லது இந்தச் சட்டம் அல்லாத வேறு சட்டம் எதிலும் மாறாக அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும் செல்திறன் உடையது ஆகும்.

யம் எழும் நேர்வில் குடிமைக்கான உறுதிச்சான்று.

13. மைய அரசாங்கம், தாம் பொருந்ததமெனக் கருதலாகும் நேர்வுகளில், எந்த ஓர் ஆளின் இந்தியக் குடிமையைப் பொறுத்து ஓர் ஐயம் இருந்து வருகிறதோ அந்த ஆள் ஓர் இந்தியக் குடிமகனென்று உறுதிச்சான்றளிக்கலாம்; மேலும் இந்தப் பிரிவின்படி வழங்கப்பட்ட ஓர் உறுதிச்சான்றானது மோசடி, பொய்யான எடுத்துரைத்தல் அல்லது முக்கியமான பொருண்மை எதையும் மறைப்பதன் மூலம் பெறப்பட்டது என மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, அந்தத் தேதியன்று அந்த ஆள் அத்தகையதொரு குடிமகனாக இருந்தார் என்பதற்கு, ஆனால் முந்திய தேதி ஒன்றில் அவர் அத்தகைய குடிமகனாக இருந்தார் என்பதற்கான சான்று எதற்கும் ஊறில்லாமல், அறுதியான சான்றாக இருக்கும்.

பிரிவு 5 மற்றும் இன் படியான விண்ணப்பத்தை முடிவுசெய்தல்.

14. (1) வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, அல்லது மைய அரசாங்கம், தன் உளத்தேர்வின்படி, பிரிவு 5 இன் அல்லது பிரிவு 6 இன்படியான ஒரு விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுக்கலாம் மற்றும் அத்தகைய ஏற்புக்கு அல்லது மறுப்புக்குக் காரணங்கள் எவையும் தரவேண்டுமென்று அது வேண்டுறுத்தப்படுதல் ஆகாது.

(2) பிரிவு 15 இன் வகையங்களுக்கு உட்பட்டு, மேற்கூறப்பட்டவாறுள்ள விண்ணப்பம் எதன்மீதும் வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு அல்லது மைய அரசாங்கம் செய்யும் முடிவு அறுதியானதாக இருக்கும்; மேலும், அது நீதிமன்றம் எதிலும் மறுத்து வாதிடப்படுதல் ஆகாது.

மேலாய்வு.

15. (1) வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் எவராலும் அல்லது (மைய அரசாங்கம் அல்லாத) வேறு அதிகாரஅமைப்பினால், இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றின் மூலம் குறையுற்ற ஆள் எவரும். அந்த ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாள் காலஅளவுக்குள் அந்த ஆணையை மேலாய்வு செய்வதற்காக, மைய அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்துகொள்ளலாம்.

(2) உட்பிரிவு (1) இன்படியான அத்தகைய விண்ணப்பம் எதுவும் பெறப்பட்டதன்பேரில், மைய அரசாங்கம், குறையுற்ற ஆளின் விண்ணப்பத்தையும், அதன்மீது அந்த ஆணையைப் பிறப்பித்த அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பு பணிந்தனுப்பலாகும் அறிக்கை எதனையும் ஆய்வு செய்த பிறகு, அந்த விண்ணப்பம் தொடர்பாக அது பொருந்தமெனக் கருதுகிறவாறான ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்; மேலும் அதில் மைய அரசாங்கம் செய்யும் முடிபே அறுதியானதாகும்.

அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

16. மைய அரசாங்கம், ஆணை வாயிலாக இந்தச் சட்டத்தின் பிரிவு 10 மற்றும் பிரிவு 18 இன் வகையங்களல்லாமல் வேறு வகையங்கள் எவற்றின் மூலமும் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் எதுவும் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் சூழ்நிலைகளிலும், வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அவற்றின் படியும், அவ்வாறு குறித்துரைக்கப்படலாகும் அலுவலர் அல்லது அதிகார அமைப்பினாலும்கூட செலுத்தப்படத்தக்கதாகும் என்று பணிக்கலாம்.

குற்றச்செயல்கள்.

17. இந்தச் சட்டத்தின்படி செய்யப்படவேண்டிய எதையும் செய்விக்கும் அல்லது செய்யப்படாதிருக்குமாறு செய்யும் நோக்கத்திற்காக, முக்கியமான விவரம் ஒன்றில் பொய்யான எடுத்துரைத்தல் எதையும் தெரிந்தே செய்கிற எந்த ஆளும், ஆறு திங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனையோ அல்லது பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

விதிகள் வகுப்பதற்கான அதிகாரம்.

18. (1) மைய அரசாங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறின்றியும், அத்தகைய விதிகள்,

(அ) இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட வேண்டும் என்று வேண்டுறுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் எதன் பதிவிற்கும், அத்தகைய பதிவு தொடர்பான வரைக்கட்டுகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும்;

(ஆ) இந்தச் சட்டத்தின்படி பயன்படுத்தப்படவேண்டிய படிவங்களுக்கும், வைத்துவரப்படவேண்டிய பதிவேடுகளுக்கும்,

(இ) இந்தச் சட்டத்தின்படி பற்றுறுதி ஆணைமொழிகளைச் செய்து வைத்தலுக்கும், அவற்றை எடுத்துக்கொள்ளுதலுக்கும், மற்றும் எந்தக் காலத்திற்குள்ளும் எந்த முறையிலும் அத்தகைய ஆணைமொழிகள் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதற்கும்,

(ஈ) இந்தச் சட்டத்தின்படி எந்த ஆளாலும் கொடுக்கப்பட வேண்டும் என்று வேண்டுறுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் அறிவிப்பு எதையும் கொடுப்பதற்கும்,

(உ) இந்தச் சட்டத்தின்படி குடிமை பறிக்கப்பட்ட ஆட்களின் பதிவுகளை அறவு செய்வதற்கும், அவர்கள் தொடர்பான குடிமையளிப்பு வழங்குதலுக்கான உறுதிச்சான்றுகளை அறவு செய்வதற்கும், திருத்துவதற்கும் மற்றும் அந்த நோக்கங்களுக்கான அத்தகைய உறுதிச்சான்றுகளை ஒப்படைத்துவிடுவதற்கும்,

(உஉ) பிரிவு 6 (அ) உட்பிரிவு (6) இன் கூறு (அ) மற்றும் (ஆ) வில் சுட்டப்பட்ட விளம்புகைகள் எந்த அதிகார அமைப்பிற்கு, எந்த முறையிலும் வடிவத்திலும் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும் என்பதும் அந்த விளம்புகைகளுடன் தொடர்புடைய பிற பொருட்பாடுகளுக்கும்,

(ஊ) இந்தியாவுக்கு வெளியே பிறந்த, இறந்த எந்த வகையையும் அல்லது விவரிப்பையும் சேர்ந்த ஆட்களின் பிறப்புகளையும் இறப்புகளையும் இந்தியத் துணைத் தூதரகங்களில் பதிவு செய்வதற்கும்,

(எ) இந்தச் சட்டத்தின்படியான விண்ணப்பங்கள், பதிவுகள், விளம்புகைகள், உறுதிச்சான்றுகள் ஆகியவற்றைப் பொறுத்தும் பற்றுறுதி, ஆணைமொழியை எடுத்துக்கொள்வதைப் பொறுத்தும், ஆவணங்களின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட அல்லது வேறு படிகள் வழங்குதலைப் பொறுத்தும், கட்டணங்களை விதிப்பதற்கும், தண்டல் செய்வதற்கும்,

(ஏ) வேறொரு நாட்டின் குடிமை ஈட்டப்படுள்ளதா என்னும் வினாப் பொருளைத் தீர்மானிப்பதற்கான அதிகாரஅமைப்பிற்கும் அத்தகைய அதிகாரஅமைப்பினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைக்கும் அத்தகைய நேர்வுகள் தொடர்பான சான்று விதிகளுக்கும்,

(ஐ) பிரிவு 10 இன்படி அமர்த்தப்பட்ட விசாரணைக் குழுக்களினால் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைக்கும், உரிமை வழக்கு நீதிமன்றங்களின் அதிகாரங்கள், உரிமைகள், மற்றும் சிறப்புரிமைகளில் எதனையும் அத்தகைய குழுக்களுக்கு அளிப்பதற்கும்,

(ஒ) மேலாய்வுக்கான விண்ணப்பங்கள் செய்யப்படலாகும் முறைக்கும், அத்தகைய விண்ணப்பங்கள்மீது நடவக்கை எடுக்கப்படுகையில் மைய அரசாங்கத்தினால் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைக்கும்,

(ஓ) இந்தச் சட்டத்தின்படி வகுத்துரைக்கப்படவேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் வேறு பொருட்பாடு எதற்கும்

வகைசெய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி விதி எதையும் வகுக்கையில், அதன் மீறுகையானது, ஆயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கதாகும் என்று மைய அரசாங்கம் வகைசெய்யலாம்.

(4) இந்தப் பிரிவின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக்கொண்ட ஒரு கால அளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும்

மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

நீக்கறவு செய்யப்பட்டது.

19. [சட்டம் 58/1960 இனால் நீக்கறவு செய்யப்பட்டது.]

## முதலாம் இணைப்புப்பட்டியல்

[பிரிவுகள் 2(1) (அ) மற்றும் 5(1) (உ) ஆகியவற்றைப் பார்க்க.]

அ. பின்வரும் பொதுநல அரசுக்குழாம் நாடுகள்:-

1. ஐக்கிய மன்னரசு
2. கனடா
3. ஆஸ்திரேலியப் பொதுநல அரசுக்குழாம்
4. நியூசிலாந்து
5. தென் ஆப்பிரிக்க இணையம்
6. பாக்கிஸ்தான்
7. இலங்கை
8. ரொடிஷியா மற்றும் நியுசிலாந்து கூட்டாட்சி.
9. கானா
10. மலேயாக் கூட்டாட்சி (மலேசியா)
11. சிங்கப்பூர்

அயர்லாந்துக் குடியரசு

குறிப்பு:-பின்வருவன வேறு பொது அரசுக்குழாம் நாடுகளாகும்.

(1) நைஜிரியக் குடியரசு
(2) சீராலியோன்
(3) டான்சானியா குடியரசு
(4) ஜாமாய்க்கா
(5) டிரினிடாட் மற்றும் டோபகோ
(6) ஜான்ஸிபார்
(7) யுகாண்டா
(8) ஸாம்பியா
(9) மால்டா
(10) காம்பியா
(11) மாளவி
(12) குயானா
(13) கென்யா குடியரசு
(14) பாட்ஸ் வானா
(15) பிஸோதோ
(16) பார்படோஸ்
(17) மொரிஸியஸ்
(18) ஸைப்ரஸ்
(19) டோன்கா
(20) பிஸி
(21) புதிய கயானா.

விளக்கம்:- இந்த இணைப்புப்பட்டியலில், "ஐக்கிய மன்னரசு "என்பது கிரேட் பிரிட்டனும் வட அயர்லாந்தும் அடங்கிய ஐக்கிய மன்னரசு என்று பொருள்படும், மற்றும் கால்வாய்த் தீவுகள், "மேன்" தீவு மற்றும் குடியேற்ற நாடுகள் அனைத்தையும் உள்ளடக்கும்; மற்றும் "ஆஸ்திரேலிய பொதுநல அரசுக்குழாம்" என்பது, பாப்புவா ஆட்சி நிலவரைகளையும், நார்ஃபோக் தீவு ஆட்சி நிலவரைகளையும் உள்ளடக்கும்.

## இரண்டாம் இணைப்புப்பட்டியல்

[பிரிவு 5 (2), 6(2) ஆகியவற்றைப் பார்க்க.]

### பற்றுறுதி ஆணை மொழி

'அ' 'ஆ' ஆகிய நான், சட்டத்தால் நிறுவப்பட்டிருக்கின்ற படியான இந்திய அரசமைப்பின்பால் உண்மையான நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருப்பேன் என்றும், நான் இந்தியச் சட்டங்களை உண்மையுடன் பின்பற்றுவேன் என்றும் ஓர் இந்தியக் குடிமகனாக என் கடமைகளை நிறைவேற்றுவேன் என்றும், உள்ளார்ந்து உறுதி மொழிகின்றேன் (அல்லது ஆணை மொழிகின்றேன்).

## மூன்றாம் இணைப்புப்பட்டியல்

[பிரிவு 6 (1) ஐப் பார்க்க]

### குடிமையளிப்பு வழங்குதலுக்கான தகுதிகள்

முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட, ஒரு நாட்டின் குடிமனாக இல்லாத ஆள் ஒருவருக்குக் குடிமையளிப்பு வழங்குதலுக்கான தகுதிகள்:—

(அ) இந்தியக் குடிமக்கள், எந்த நாட்டின் சட்டம் அல்லது நடைமுறையினால் குடிமையளிப்பு வழங்குதல் மூலம் அந்த நாட்டின் குடிமகனாக அல்லது குடிமக்களாக ஆவதிலிருந்து தடுக்கப் படுகின்றார்களோ அந்தநாடு எதனுடைய ஒரு குடிமகனாக அல்லது குடிமக்களாக அவர் இல்லாதிருக்கின்றார்;

(ஆ) ஏதேனும் நாட்டின் ஒரு குடிமகனாக அவர் இருந்தால், குடிமையைத் துறப்பதற்கென அங்கு செல்லாற்றலிலுள்ள சட்டத்துக்கு இணங்க, அந்த நாட்டின் குடிமையை அவர் துறந்துவிட்டு அவ்வாறு துறந்துவிட்டதை மைய அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறார்;

(இ) விண்ணப்பத் தேதிக்கு அடுத்து முந்திய பன்னிரண்டு திங்கள் கால அளவு முழுவதும், அவர், இந்தியாவில் குடியிருந்திருக்கின்றார் அல்லது இந்தியாவிலுள்ள ஓர் அரசாங்கப் பணியில் இருந்திருக்கிறார் அல்லது பகுதியாக ஒன்றிலும் பகுதியாக மற்றொன்றிலும் இருந்திருக்கின்றார்;

(ஈ) சொல்லப்பட்ட பன்னிரண்டு திங்கள் காலஅளவுக்கு அடுத்து முந்திய பன்னிரண்டு ஆண்டுகளின்போது, அவர், இந்தியாவில் குடியிருக்கின்றார் அல்லது இந்தியாவிலுள்ள ஓர் அரசாங்கத்தின் பணியில் இருந்திருக்கின்றார் அல்லது பகுதியாக ஒன்றிலும் பகுதியாக மற்றொன்றிலும், காலஅளவுகளை மொத்தமாகக் கூட்டிப் பார்க்கும்போது, ஒன்பதாண்டுக் காலஅளவுக்குக் குறையாமல் இருந்திருக்கின்றார்;

(உ) அவர் நன்னடத்தை உடையவராக இருக்கின்றார்;

(ஊ) அரசமைப்பின் இணைப்புப்பட்டியல் எட்டில் குறித்துரைக்கப்பட்ட ஒரு மொழியில் போதுமான அறிவை அவர் பெற்றிருக்கின்றார், மற்றும்

(எ) அவருக்குக் குடிமையளிப்பு வழங்குதலுக்கான உறுதிச்சான்று ஒன்று வழங்கப்படுங்கால், அவர், இந்தியாவில் குடியிருப்பதற்கு, அல்லது இந்தியாவிலுள்ள ஓர் அரசாங்கத்தின் அல்லது இந்தியா ஓர் உறுப்பினராக உள்ள ஒரு பன்னாட்டு அமைப்பின்கீழ், அல்லது இந்தியாவில் நிறுவப்பட்டிருக்கிற ஒரு சங்கத்தின், நிறுமத்தின் அல்லது ஆட்களின் குழுமத்தின்கீழ் பணிபுரியச் சேருவதற்கு அல்லது அதில் தொடர்ந்திருப்பதற்குக் கருதுகின்றார்:

வரம்புரையாக: மைய அரசாங்கம், குறிப்பிட்ட ஏதேனும் நேர்வின் சிறப்புச் சூழ்நிலைகளிலும் தான் பொருத்தமானது என்று கருதுமானால்—

(i) மேற்கண்ட கூறு (இ) இன் நோக்கங்களுக்காக, விண்ணப்பத் தேதிக்கு முன்பு ஆறு திங்களுக்கு மேற்படாமல் முடிவடையும் பன்னிரெண்டு திங்களுக்குத் தொடர்ச்சியான ஒரு காலஅளவு, அது அந்தத் தேதிக்கு அடுத்து முன்பு இருந்ததைப் போன்றே, கணிக்கப்படுவதற்கு இசைவளிக்காலம்;

(ii) மேற்கண்ட கூறு (ஈ) இல் சொல்லப்பட்ட மொத்தத்தைக் கணக்கிடுகையில், விண்ணப்பத் தேதிக்கு முன்பு, பதின்மூன்று ஆண்டுகளுக்கும் முற்பட்டு குடியிருந்த அல்லது பணி புரிந்த கால அளவுகள் கணிக்கப்படுவதற்கு இசைவளிக்காலம்.